# இஸ்லாமியத் தமிழ் இலக்கியமும் நவீன தமிழ் இலக்கியமும்: 'கனீமத்' தொகுதியை முன்னிறுத்தியதொரு ஆய்வு

எம்.ஏ. முஹம்மது றமீஸ்

தலைவர், மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

***பிரதான சொற்கள்:*** *கனீமத், இஸ்லாமிய தமிழ் இலக்கியம், நவீன தமிழ் இலக்கியம்*

**அறிமுகம்**

தமிழ் இலக்கிய வரலாறு பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ இலக்கியங்களின் வருகை பற்றியும் பேசுகின்றது. இவ்வாறான பல்வகைப் பண்பாடு தமிழுக்கு உரித்தான ஒன்றாகும். இப்பண்பாட்டம்சத்தில் பௌத்த, இந்து மரபுகள் இந்திய நாடுகளுக்கிடையிலானதாக இருக்க, சர்வதேசம் தழுவிய அரபு, கிறிஸ்தவ மரபு தமிழோடு இணைந்தது புதுமையானதே. தமிழ்ப் பண்பாட்டோடு இணைந்த இந்தியப் பண்பாடு சாராத முதல் மதம் இஸ்லாமே ஆகும். கிறிஸ்தவம் பின்னரே தமிழுக்கு வருகிறது.

அரேபியர்களுக்கும் யமன் வாசிகளுக்கும் தென்னாசிய வியாபாரத் தொடர்பு இருந்தது. இவ்வியாபாரத் தொடர்புக்காக பயன்பட்ட கப்பற் பாதையில் தமிழ் நாடும் இலங்கையும் அமைந்திருந்தன. இதனால் இங்கு பேசப்பட்ட தமிழ் அவ்வியாபார தொடர்புள்ளவருக்கும் பரிச்சயமானதாக அமைந்தது. இந்த உறவு மொழி, இலக்கிய, பண்பாட்டு ரீதியான பிற்கால வளர்ச்சிக்கு அடிப்படையானதாக அமைந்தது.

முஸ்லிம்கள் சமய நடவடிக்கைகளில் மிக ஈடுபாட்டுடன் இயங்குபவர்கள். அவர்களது சமய மொழி அரபாக இருந்தது. அவர்கள் அதனைப் பயின்று கொள்ள மிக ஆவலுடன் இருந்தனர். அதனை புனிதமாகவும் கருதினர். எனவே அவர்கள் பேசும் மொழியான தமிழைக் கொண்டு அரபு லிபியில் தமது சமய நூல்களை எழுதினர். அவை அரபுத் தமிழாயிற்று. பிற்காலத்தில் சரளமாக அவர்கள் பயன்படுத்தும் அரபுச் சொற்கள் தமிழிலும் வழங்கின.

பேராசிரியர் எம்.எம். உவைஸ் கூட இஸ்லாமியத் தமிழுக்கு உணர்வு ரீதியான அர்த்தத்தையே வழங் கினார். 'இஸ்லாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி' என அவர் விளம்பினார். இஸ்லாமியப் புலவர்களினால் தமிழ் மொழியில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் யாவும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியமென்றே பலரும் விளக்கினர். எடுத்துக்காட்டாக

"இஸ்லாம் மார்க்கத்தினை பின்பற்றுகின்ற முஸ்லிம் புலவர்கள் எழுதும் நூல்களை இஸ்லாமியத் தமிழ் இலக்கியமெனக் கொள்ளலாம்"

என்ற எஸ்.எம். ஹனீபாவின் (1982) கூற்றைக் கொள்ளலாம். அப்படியானால் இஸ்லாமியர்கள் இயற்றுகின்ற எல்லா இலக்கியங்களையும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியமெனக் கொள்வதா? இஸ்லாமியர் தவிர்ந்த வேறு எவராலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை படைக்க முடியாதா? இஸ்லாமியர் அல்லாதோரும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தைப் படைக்க முடியும். இஸ்லாமிய சமயக் கொள்கைக்கு முரணாகாத முறையில் இஸ்லாமியக் கருப் பொருட்களைக் கொண்டு இலக்கியங்களைப் படைக்க முடியும்.

"முஸ்லிம் ஒருவர் இயற்றும் இலக்கியமெல்லாம் முஸ்லிம் இலக்கியமாகுமா? ஆகாது என்பது சொல்லாமலே புரியும் முஸ்லிம்களாக எமக்கென உள்ள கலாசாரத் தனித்துவத்தை பிரதிபலித்துக் காட்டும் இலக்கியமே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்"

என ஏ.எம்.ஏ. அஸீஸ் (1982) குறிப்பிடுகின்றார்.

முஸ்லிம் மக்களின் உண்மையான வாழ்க்கை முறை, அதன் பிரச்சினைகள் முதலானவற்றை எப்படிப் பார்ப்பது? எனவேதான் நவீன இலக்கியம் சார்ந்தவற்றை இவ்வாறு சமயப் பிரிகோடுகளால் பிரிக்க முடியாதென்பர்.

தமிழில் முஸ்லிம்களும் இலக்கியம் செய்ய விரும்பினர். காவிய நூல்களும் தத்துவ நூல்களும் போல பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் செய்யத் தொடங்கினர். தமது தன்னிகரில்லாத தலைவனாக முகம்மதைக் கொண்டு பாட விழைந்தனர். அரேபியச் சூழலில்

வாழ்ந்த முஹம்மதை தமிழகச் சூழலில் உள்ள மொழியில் பாடி சீறாப்புராணம் செய்தனர். இந்த மரபு இஸ்லாமியத் தமிழ் இலக்கியமெனப்பட்டது.

இஸ்லாமியர்களின் படைப்புகள் வாய்மொழி மரபிலும் செந்நெறி மரபிலும் அமைந்திருந்தன. காப்பியம் என்ற பேரிலக்கிய வடிவிலும் ஆற்றுப்படை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை முதலான சிற்றிலக்கிய வடிவிலும் இஸ்லாமியச் செய்திகளை உட்கொண்டு பாடப்பட்டவையும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகப் பெயர் பெற்றன. நபிகள் நாயகம் வரலாறு, வேறு நபிகள் வரலாறு, இறைநேசர் வரலாறு, இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமியக் கடமைகள் எனும் பொருள்களில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்சார் மரபிலக்கியங்கள் பாடப்பட்டன. முனாஜாத், கிஸ்ஸா, மஸ்அலா, நாமா, பக்கீர் பைத், மௌலூத், ஸலவாத்து முதலானவை தூய இஸ்லாமிய இலக்கிய வடிவங்களாக தமிழிலே வழங்குகின்றன. மேலும் முஸ்லிம்களின் தற்கால சமூக, அரசியல், பண்பாட்டு அனுபவங்கள் தமிழின் நவீன இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

இன்று ஈழத்தில் பெரும்பான்மைச் சமூகங்களுக்கிடையிலே வாழ்கின்ற முஸ்லிம்கள் தமது இலக்கியங்களை 'முஸ்லிம் தேச இலக்கியம்' எனவும் அழைக்கின்றனர். உண்மையில் இலங்கையின் இனப்பிரச்சினைச் சூழலில் இரண்டாவது சிறுபான்மையினரான முஸ்லிம்கள் தமது மொழி, அரசியல், இலக்கியம் பற்றிய தனித்துவ சிந்தனைக்கு உள்ளாகினர். அதன் விளைவாகவே முஸ்லிம் தேச இலக்கியம் என முஸ்லிம்களின் இலக்கியங்களை அடையாளப்படுத்தத் துணிந்தனர். எப்படி இருப்பினும் முஸ்லிம்கள் தந்த தமிழ் இலக்கிய வடிவங்களும் தமிழிலே உள்ள முஸ்லிம்கள் சார் இலக்கியங்களும் தமிழ் இலக்கியத்துள் உள்ளன என்றே வாதிட வேண்டியுள்ளது.

**ஆய்வுமுறையியலும் முடிவுகளும்**

இச்சூழ்நிலையிலே, மன்சூர் ஏ. காதிரின் 'கனீமத்' தென்கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க வெளியீடாக வந்துள்ளது. இத்தொகுதியில் உள்ள பெரும்பாலான கவிதைகள் முஸ்லிம் சமூகத்தின் சமூக, அரசியல், போராட்ட வாழ்வு குறித்தே பேசுகின்றது. உள்ளூர், தேசிய, சர்வதேசிய முஸ்லிம்கள் மீதான பார்வை அவரது கவிதைகளினூடே வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் உள்ள கவிதைகளின் எடுத்துரைப்பு, வடிவம், மற்றுமுள பண்புகள் யாவும் நவீன கவிதைக்குரியவை. இந்நிலையில் நூலின் தலைப்பு அரபுச் சொல்லாலே அமைந்துள்ளது. கனீமத் என்பது புனித போரில் எஞ்சிய பொருட்களைக் குறிக்கும் புராதன அரபுச் சொல்லாகும். இக்கருத்தினாலான தலைப்பில் அமைந்த இந்நூல் உள்ளே இஸ்லாமிய பண்பாட்டு மரபு தழுவியும் தழுவாததுமான பல கவிதைகள் உள. இருப்பினும் இவ்வாறான தலைப்பிலேயே அமைந்து இக்கவிதை நூல் ஈழத்து தமிழ் இலக்கிய மரபிலேயே இன்னுமொரு திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

எனவே, இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பான கருத்துக்களை இரண்டாம் நிலைத் தரவுகளினூடாகப் பெற்று குறிப்பிட்ட 'கனீமத்' தொகுதியினூடே தமிழ் இலக்கியத்தினுள் முஸ்லிம்களின் தமிழ்ப்பணி குறித்தும் அதனூடாகப் பெற்ற புதிய வரவுகளை சிலாசித்துப் பேசுவதுமே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**உசாத்துணை நூல்கள்**

சிவத்தம்பி, காத்திகேசு, (1993), தமிழில் இலக்கியத்தில் மதமும் மானிடமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
நு.்மான், எம்.ஏ., (2006), மொழியும் இலக்கியமும், காலச்சுவடு பதிப்பகம், சென்னை.
மன்சூர் ஏ காதர், (2011), கனீமத், தமிழ் சங்கம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
றமீஸ் அப்துல்லாஹ், (2001),"இஸ்லாமிய தமிழ் இலக்கியம் - சில குறிப்புக்கள்", மலை ஒளி, தமிழ் மன்றம், கல்கின்னை.
ஹனீபா, எஸ்.எம்., (1982), இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி, பெயர்பிரின்ட், கொழும்பு.